**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனிதவள அபிவிருத்தி நிறுவகம் -2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனிதவள அபிவிருத்தி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்தி நிறுவக ஒழுங்குமுறையின் 23 ஆம் உறுப்புரை மற்றும் பல்லைக்கழகச் சட்டத்தின் 108(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலத்தை கழித்து அனைத்து வருடத்திலும் அறிக்கையிடும் காலப்பகுதி நிறைவடையும் திகதியில் மீளாய்வு செய்ய வேண்டியதுடன் உத்தேச மாற்றங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் கணக்கீடு மதிப்பீடொன்றில் வேறுபாடாக கணக்கு வைக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 663,439 கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 4,000,000 ஆன மூலதன நிதியேற்பாடு தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இனங் காணுதல் மற்றும் அளவீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் ஊழிய முகாமைத்துவ பட்டப்பாடநெறியின் வருமானம் காசு அடிப்படையில் வருமானத்தில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த ரூபா 721,200 ஆன விண்ணப்ப கட்டணங்கள் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | விண்ணப்பதாரர்கள் திசெம்பர் மாதம் வரையிலும் தீர்மானித்திராத காரணத்தினால் வருமானமாக கருத முடியாதிருந்தது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஊழிய முகாமைத்துவ பட்டப்பாடநெறி நீங்கலாக 22 பாடநெறிகளுக்குரிய வருமானங்களை இனங்காணும் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. நிறுவனத்தினால் நடாத்தப்படும் அப்பாடநெறிகளிலிருந்து மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 11,813,750 கூட்டுத்தொகை நேரடி வருமானமாக இனங்காணப்படாது பிற்போடப்பட்ட வருமானமாக (Differed Income) இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த அளவினால் ஆண்டின் வருமானம் குறைத்தும் பிற்போடப்பட்ட வருமானம் அதிகரித்தும் | பாடநெறிக் கட்டண வருமானம் பாடநெறிகளை நடாத்தும் காலம் முழுவதும் பயன்படுத்தப் படுகின்றமையால் அவ்வருமானத்தினை பிற்போடப்பட்ட வருமானமாக கருதி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை சரியாக கணக்கு வைக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) ஆண்டிற்குரிய பாடநெறி வருமானங்களை இனங்காணுவதற்கு பதிலாக செலவினங்களுக்கு சமனான அளவினை வருமானமாக இனங்காணும் நடைமுறை காரணமாக 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டிருந்த குறுங்கால மற்றும் பட்டப்பாடநெறிகளுக்குரிய ரூபா 25,526,363 கூட்டுத்தொகையான வருமானம் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ஒரு பாடநெறி நிறைவடைந்ததன் பின்னர் பாடநெறி இணைப்பாளரால் எழுத்துமூலம் குறித்த பாடநெறி நிறைவு செய்யப்பட்டதாக நிதிப் பிரிவிற்கு அறிவித்த பின்னர் பாடநெறிக்குரிய வருமானம் ஆண்டின் வருமானமாக இனங்காணப்படும். | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு சரியாக கணக்கு வைக்க வேண்டும். |

## 1.6. செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| Geographical Information Database (GID) தயாரிக்கும் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் மதியுரையாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,100,035 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய பட்டியல்கள் எமக்கு கிடைக்கவில்லை. | உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,571,041 ஆன மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 37,713,081 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 27,142,040 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வெளிவாரி பாடநெறி வருமானம் ரூபா 15,107,672 இனால் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 6,296,405 இனால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நலன்புரி மற்றும் சமூகப் பொறுப்பு நிதியத்தின் (Welfare and Social Responsibility Fund) ரூபா 3,815,947 ஆன மீதியொன்று நிலவிய போதிலும் நிதியத்தினை தாபித்த நோக்கத்தினை அண்மிப்பதற்கு குறித்த காலப்பகுதியினுள் எந்த பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | Covid - 19 தொற்று நோய் நிலைம் வேகமாகப் பரவி வருவதால், சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று, மேலும் அந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பலர் கோவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், நலன் மற்றும் சமூகப் பொறுப்புகளைச் செய்வதற்கு ஏற்ற சூழலொன்று காணப்படவில்லை. | இலக்கிடப்பட்ட பணிகளை கண்டறிந்து திட்டமிட்ட முறையில் செலவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |